விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அமைச்சு

விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அமைச்சின் கீழ் செயற்படும் இலங்கை கோள்மண்டலத்திற்கான விரிவுரையாளர் பதவிக்கு (கள/அலுவலக அடிப்படையிலான உத்தியோகத்தர் பிரிவு – சேவை வகுதி 01, தரம் II) திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல் – 2026

விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அமைச்சின் கீழ் செயற்படும் இலங்கை கோள்மண்டலத்தின் கள/அலுவலக அடிப்படையிலான உத்தியோகத்தர் பிரிவு – சேவை வகுதி 01, தரம் II இன் கீழ் விரிவுரையாளர் பதவியில் நிலவும் வெற்றிடத்தை நிரப்புவதற்காக, இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்த இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. வெற்றிடங்களின் எண்ணிக்கை - ஒன்று (01)

2. தேவையான தகைமைகள்:

(i) **கல்விசார் தகைமைகள் :**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் அல்லது அரசாங்க பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்பட்ட பட்டம்; அல்லது,

(ஆ) இலங்கைப் பாராளுமன்றத்தின் சட்டம் ஒன்றின் மூலம் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்பட்ட பட்டம்; அல்லது,

(இ) 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25A ஆம் பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பட்டம்.

(ii) **அனுபவம் :**

விரிவுரையாளர் / பயிற்றுவிப்பாளர் அல்லது செயல்விளக்குநர் (Demonstrator) போன்ற பதவிகளில் குறித்த பதவிக்குப் பொருத்தமான ஒரு (01) வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

குறிப்பு:

அடிப்படைத் தகைமைகளை உறுதிப்படுத்தும் ஆவணங்களின் சுய உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும். நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ்களில் உரிய காலப்பகுதிகள் குறிப்பிடப்படாதிருப்பின், குறித்த காலப்பகுதிகளை உறுதிப்படுத்தும் எழுத்துமூலமான உறுதிப்படுத்தலை சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து பெற்றுச் சமர்ப்பிப்பது விண்ணப்பதாரரின் பொறுப்பாகும். உரிய காலப்பகுதி குறிப்பிடப்படாத மற்றும் அக்காலப்பகுதி உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தப்படாத சான்றிதழ்கள் புள்ளிகள் வழங்குவதற்காகக் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

(iii) **வயதெல்லை :**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரர்கள் 21 வயதுக்குக் குறையாத வர்களாகவும் 35 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(iv) **சம்பள அளவுத்திட்டம் :**

2025.03.25 ஆம் திகதிய 10/2025 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, இப்பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 62,230.00 – 10 x 1,190 – 11 x 1,360 – 15 x 1,670 – ரூ. 114,140 .00 (MN 06 – 2025) ஆகும்.

(v) **உடல் தகைமைகள் :**

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உள ஆரோக்கியத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(vi) **ஏனைய தகைமைகள் :**

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

(ஆ) விண்ணப்பதாரர்கள் சிறந்த நன்னடத்தையைக் கொண்டிருத்தல் வேண்டும். (இதனை உறுதிப்படுத்துவதற்காக, விண்ணப்பதாரர் வசிக்கும் பிரிவுக்குரிய கிராம அலுவலரிடமிருந்து கடந்த ஆறு (06) மாதங்களுக்குள் பெற்றுக்கொள்ளப்பட்ட DS 04 சான்றிதழ் மற்றும் மற்றுமொரு நன்னடத்தைச் சான்றிதழை என்பனவற்றை சமர்ப்பித்தல் வேண்டும்.)

(இ) குறித்த பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான அனைத்துத் தகைமைகளையும் விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தலில் / வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று முழுமையாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

Gazette.lk AMBITIONS REALIZED

3. **பதவியில் நியமிக்கப்படுவதற்கான நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும்:**

(i) நீங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் / தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ஆகியவற்றில் பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் அவ்வப்போது விதிக்கப்படும் ஏற்பாடுகளுக்கு அமைவாக, அதற்குரிய பங்களிப்புத் தொகைகளை நீங்கள் செலுத்துதல் வேண்டும்.

(ii) இந்நியமனம் மூன்று (03) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும். இப்பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று (03) வருடங்களுக்குள், ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iii) 2020.10.16 ஆம் திகதிய 18/2020 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக, பரிந்துரைக்கப்பட்ட ஏனைய அரச கரும மொழியில் / அரச கரும மொழிகளில் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(iv) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை, அரசாங்க நிதி ஒழுங்குவிதிகள், அரசாங்கத்தின் ஏனைய ஒழுங்குவிதிகள், சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் என்பவற்றுக்கும், விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அமைச்சின் கீழ் செயற்படும் இலங்கை கோள்மண்டலத்தின் கள/அலுவலக அடிப்படையிலான உத்தியோகத்தர் பிரிவு – சேவை வகுதி 01 இன் விரிவுரையாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கும், அவை தொடர்பாக அவ்வப்போது வெளியிடப்படும் திருத்தங்களுக்கும் நீங்கள் கட்டுப்பட்டவராவீர்கள்.

(v) விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்ப மொழி மூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. நீங்கள் நியமனம் பெறுவதற்குத் தகுதியுடைய மொழி மூலம், விண்ணப்பப் படிவத்தில் உங்களால் குறிப்பிடப்பட்ட மொழி மூலமாகவே இருக்கும்.

4. **ஆட்சேர்ப்பு முறை :**

அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்களுள், விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அமைச்சின் செயலாளரினால் அதிகாரமளிக்கப்படும் நிறுவனமொன்றினால் நடத்தப்படும் எழுத்துப் பரீட்சை மற்றும் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர் குறித்த பதவி வெற்றிடத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்.

(அ) **எழுத்துப் பரீட்சை**:

பாடங்கள்	*கால அளவு*	*அதி கூடிய புள்ளிகள்*	*சித்தி பெறுவதற்கான புள்ளிகள்*
நுண்ணறிவுப் பரீட்சை (IQ Test)	01 மணித்தியாலம்	100%	40%
பொதுக் கேள்வித்தாள் பரீட்சை	01 மணித்தியாலம்	100%	40%

(ஆ) **பரீட்சைக்கான பாடத்திட்டம் :**

வினாத்தாளின் பெயர்	*பாடத்திட்டம்*
நுண்ணறிவுப் பரீட்சை	விண்ணப்பதாரரின் பொதுவான நுண்ணறிவு, தர்க்கரீதியாகச் சிந்திக்கும் திறன், கருத்துக்களை வெளிப்படுத்தும் திறன், கணிதத் திறன் மற்றும் புரிந்து கொள்ளும் ஆற்றல் ஆகியவற்றை மதிப்பீடு செய்வதற்கான வினாக்களைக் கொண்ட வினாத்தாள்.

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

வினாத்தாளின் பெயர்	*பாடத்திட்டம்*
பொதுப் பரீட்சை	இணைந்த கணிதம் / தூய கணிதம் மற்றும் பிரயோகக் கணிதம், பௌதிகவியல், கணினி விஞ்ஞானம், வானியல், விண்வெளி விஞ்ஞானம் மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் தொடர்பான அறிவை மதிப்பீடு செய்வதற்கான வினாக்களைக் கொண்ட வினாத்தாள்.

(இ) **தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை :**

மதிப்பீடு செய்யப்பட்டு புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புகள்	*அதி கூடிய புள்ளிகள்*	*அதி குறைந்த புள்ளிகள்*
1. விரிவுரைகளை நிகழ்த்தும் திறன் (presentation ஒன்றினை செய்யக்கூடிய திறன்) 2. வானியல் தொடர்பான அறிவு 3. தொலைநோக்கிகள் தொடர்பான அறிவு 4. நேர்முகப் பரீட்சைக் குழுவின் விருப்பத்திற்கேற்ப திறன்கள், தலைமைத்துவம், மனப்பாங்கு, ஆளுமை மற்றும் தொடர்பாடல் திறன்கள்	60 25 10 05	பொருந்தாது

5. **விண்ணப்பதாரர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்துதல்:**

அனைத்து வகையிலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் மட்டுமே தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

நேர்முகப் பரீட்சையின்போது அனைத்து சான்றிதழ்களின் மூலப் பிரதிகளுடன், விண்ணப்பதாரரினால் உண்மைப் பிரதிகள் எனச் சுயமாகச் சான்றளிக்கப்பட்ட ஒளிப்படப் பிரதிகளின் இரண்டு (02) தொகுதிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின்போது விண்ணப்பதாரர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காகப் பின்வரும் அடையாள ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்:

(i) ஆட்களைப் பதிவு செய்யும் ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை ;

(ii) செல்லுபடியாகும் வெளிநாட்டுக் கடவுச்சீட்டு;

(iii) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

6. **விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் முறை:**

(i) விண்ணப்பங்களாவன, 2026.11.30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் "செயலாளர், விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அமைச்சு, 3 ஆம் மாடி, செத்சிறிபாய முதலாம் கட்டம், பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடிய வகையில் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். அத்திகதிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்

(ii) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பத்தின் மாதிரி விண்ணப்பப்படிவமானது, இவ்வறிவித்தலின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை A4 அளவிலான தாளில் தயாரித்து, முதல் பக்கம் 01 முதல் 05 வரையிலும், இரண்டாம் பக்கம் 06 முதல் 09 வரையிலும் அமையும் வகையில் ஒழுங்குபடுத்தி, தமது கையெழுத்தில் முழுமையாகப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பத்தை உள்ளடக்கிய கடித உறையின் மேல் இடது மூலையில் "இலங்கை கோள்மண்டலத்தின் விரிவுரையாளர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(iv) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பமானது, அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபர் / சமாதான நீதவான் / சத்திய ஆணையாளர் / சட்டத்தரணி / பிரசித்த நொத்தாரிசு / முப்படைகளின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் அல்லது ரூபா 62,230.00 அல்லது அதற்கு மேற்பட்ட மாதாந்த மொத்தச் சம்பளம் பெறும் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவியிலுள்ள உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றளிக்கப்படுதல் வேண்டும்.

(v) தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை, தாம் பணியாற்றும் திணைக்களத்தின் ,திணைக்களத் தலைவரின் ஊடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

(vi) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் வடிவமைப்பிற்கு அமைவாக இல்லாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் தொலைந்து போதல் அல்லது தாமதமடைதல் தொடர்பான எவ்வித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

7. **தவறான தகவல்களை வழங்குதல்:**

நீங்கள் சமர்ப்பித்த விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல் தவறானது அல்லது பொய்யானது என ஆட்சேர்ப்புக்கு முன்னர் கண்டறியப்பட்டால், உங்கள் விண்ணப்பதாரர் தகுதி இரத்துச் செய்யப்படும். அவ்வாறான தவறான அல்லது பொய்யான தகவல் ஆட்சேர்ப்புக்குப் பின்னர் கண்டறியப்பட்டால், அதற்குரிய நடவடிக்கைகளுக்கு உட்பட்டு உங்களை சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

8. குறித்த பதவி வெற்றிடத்தை நிரப்புவதா அல்லது நிரப்பாமல் விடுவதா என்பது தொடர்பான உரிமை விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அமைச்சின் செயலாளருக்கு உரியது.

9. இவ்வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் பிரதிகளுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடு அல்லது பொருத்தமின்மை காணப்படுமாயின், சிங்கள மொழிப் பிரதியே மேலோங்கியதாகக் கருதப்படும்.

10. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் தொடர்பாக அல்லது இவ்வாட்சேர்ப்பு நடைமுறையில் ஏதேனும் சிக்கலான நிலைமை ஏற்படுமாயின், அது தொடர்பாக விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அமைச்சின் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

செயலாளர்.

விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அமைச்சு,
2026, நவெம்பர் 09.

AMBITIONS REALIZED